# தமிழ்மேடை நாடகத் தலைமகன்

**முனைவர் கோ.கருணாகரன்**

**இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை**

**மதுரைக்கல்லூரி(தன்னாட்சி), மதுரை 625 011.**

**karunakaran@maduracollege.edu.in**

**66**

**ஆய்வுச் சுருக்கம்(Abstract):**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தமிழ்நாடக உலகின் அசைக்க முடியாத நாடக ஆளுமையாகத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் விளங்கினார். அவர் ஆற்றிய நாடகப் பணிகள் எண்ணி வியக்கத்தக்கனவாகும். இந்திய விடுதலைக்காகப் பல ஊடகங்கள் செயல்பட்டன. அவற்றில் தமிழ் நாடகங்களும் குறிப்பிடத்தகுந்தப் பங்களிப்பினைச் செய்தன. அவற்றில் கதரின் வெற்றி, பம்பாய் மெயில், தேசியக்கொடி, கதர்பக்தி, பஞ்சாப் கேசரி போன்ற நாடகங்களைக் குறிப்பிடலாம். இந்நாடகங்களோடு சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய வீரபாண்டிய கட்டப்பொம்மு, வள்ளித் திருமணம் நாடகங்களும் விடுதலை உணர்வை ஊட்டியதில் மிக முக்கியமானவைகளாகும். சங்கரதாஸ் சுவாமிகள் புராண இதிகாசங்களை மேடை நாடகங்களாக்கிப் பட்டிதொட்டியெல்லாம் பரவச்செய்தார். அவருடைய நாடகங்கள் விடுதலை உணர்வு, பக்தி, காதல், பொழுதுபோக்கு எனப் பல கோணங்களில் அமைந்திருந்தன. அத்தகைய நாடகப் பணிகள் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்(Keywords):**

புலவரேறு - பிதாமகன் –- சூத்திரதாரி – தம்பட்டை – கடோர்கஜன் – தறுதலை – மாபாவியோர்.

**முன்னுரை:**

தமிழ் இலக்கிய வரலாற்றினைப் பாரதியாரில் இருந்து அறிந்துகொள்வது போல், இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மேடை நாடகக்கலை வரலாற்றினைத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகளிலிருந்துதான் அறிய வேண்டியுள்ளது. இவர் திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடிக்கு அருகில் உள்ள காட்டுநாயக்கன்பட்டி என்னும் கிராமத்தில் தாமோதரன் பேச்சியம்மாளுக்கு மகனாகச் செப்டம்பர் மாதம்7ந் தேதி,1867இல் தோன்றினார். இவருக்குப் பெற்றோர்கள் இட்ட பெயர் 'சங்கரன்' என்பதாகும். ஆண்டுதோறும் திருச்செந்தூர் முருகனுக்கு நேர்த்திக்கடனாக மாலை அணிந்து செல்வதை இவர் வழக்கமாகக் கொண்டவர். இதனால் ஊர்மக்கள் இவரை 'சுவாமிகள்' என அழைத்தனர். பின்பு அப்பெயரே நிலைத்து சங்கரதாஸ் சுவாமிகள் ஆயிற்று. குழந்தைப் பருவம் முதல் தூத்துக்குடியில் வளர்ந்த இவர் தமிழ் மீது ஆர்வமிக்கவராய்த் திகழ்ந்தார். கவிதைகள் இயற்றுவதில் வல்லவரானார். சிறுவயதில் அவர் தந்தையாரிடம் தமிழ்ப் பயின்றார். அவரை இராமாயணப் புலவர் என சிறப்புப் பெயரிட்டு அழைத்தனர். பின்பு பழனி, 'புலவரேறு' தண்டபாணி சுவாமிகளிடம் முறையான தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். உப்பு மண்டியில் சில காலம் கணக்கராகப் பணியாற்றினார். அவ்வப்போது சில நாடகக் குழுக்கள் தூத்துக்குடியில் வந்து நாடகங்கள் நிகழ்த்தின. அந்நாடகங்களுக்குச் சில பாடல்களை எழுதத் தொடங்கினார்.

**கல்வியும் நாடகப்பணியும்:**

தமிழ் மேடை நாடகத்தின் தந்தையான சங்கரதாஸ் சுவாமிகள் தம் இருபத்திரெண்டாம் வயதில் நாடகம் எழுதத் தொடங்கினார் என்பது 'தமிழ்ச் சினிமாவின் கதை' நூலாசிரியரான அறந்தைநாராயணன் கருத்தாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேடை நாடக உலகின் பிதாமகனாக சங்கரதாஸ் சுவாமிகள் விளங்கினார். சுவாமிகள் பற்றி நவீன நாடக ஆசிரியரான கே.ஏ.குணசேகரன், "சுவாமிகள் ஒரு நல்ல நாடக இயக்குநர், நாடக ஆசிரியர், நாடக நடிகர், நாடகம் காணும் ரசிகர், இசை அமைப்பாளர், பாட்டு மயமாகவே நாடக மேடை இருந்த நிலையை மாற்றி, நாடக மேடையை விவாத மேடையாக ஆக்கிய வசனகர்த்தா, பழமையான புராணக்கதை மாந்தர்கள் வழிப் பழமையிலிருந்து சீர்திருத்தம் கொண்டுவர முனைந்த ஒரு சீர்திருத்தவாதி, உடை ஒப்பனையாளர், விதூசகன் வழியே உலகியல் நிலையை உயர்த்திய நடப்பியல் கலைஞர், தமிழ் இலக்கியங்களை எல்லாம் பயின்று தேவையானபடி விரிவுரைசெய்து காட்டிய புலமைமிக்கத் தமிழ் ஆசான், திறமான புலமையெனில் வணக்கம் செய்து பயன்படுத்தி மொழியாக்கம் செய்த மொழிபெயர்ப்பாளர் என்றெல்லாம் மக்களிடம் இன்று பேசப்பட்டுக்கொண்டிருக்கும் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ் நாடக உலகிற்கு நல்ல ஒரு முனைவர் ஆவார் என்று குறிப்பிடுகிறார். இச்செய்திகள் சங்கரதாஸ் சுவாமிகள் பற்றி எளிதில் அறிந்துகொள்ள ஏதுவாக அமையும்.

நாடகக்கலைக்கு இசையறிவு இன்றியமையாதது என்பதனை உணர்ந்த சுவாமிகள், புதுக்கோட்டை மான்பூண்டியாபிள்ளை என்னும் இசை மேதையிடம் இசைக்கலையைக் கற்றார். சுவாமிகளின் திறமையைக் கண்டு வியந்த மான்பூண்டியா பிள்ளை, சுவாமிகளைத் தன் மகனாகப் பாவித்துக் கொண்டார். இராமுடு ஐயர், கலியாணராம ஐயர் நாடகக் குழுக்களிலும் பயிற்சிப் பெற்று நாடகத்தில் ஆழ்ந்த அறிவினைப் பெற்றார். சாமி நாயுடு நாடக சபையில் சூத்திரதாரியாகப் பணியாற்றினார். அப்போது நடிகர்களுக்கு நடிப்பு, வசனம் போன்றவற்றைக் கற்பிக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தார். இதற்கிடையில் நாடகப் பணியினின்றும் விலகித் துறவியாகிப் பல்வேறுத் தலங்களுக்கும் சென்றார். பின்பு, மான்பூண்டியா பிள்ளையின் வற்புறுத்தலினால் மீண்டும் நாடக உலகில் நுழைந்தார். அதன்பின் வள்ளி வைத்தியநாத ஐயர், அல்லி பரமேஸ்வர ஐயர் முதலியோரின் நாடக சபைகளிலும், பி.எஸ்.வேலு நாயரின் சண்முகானந்த சபையிலும் பல காலம் ஆசிரியராகப் பணியாற்றினார்.

**நாடகசபையும் மாணவர்களும்:**

கி.பி.1910இல் சமரச சன்மார்க்க நாடக சபையைத் தொடங்கினார். இச்சபையில் மாரியப்ப சுவாமிகள், எஸ்.ஜி.கிட்டப்பா அவர்களும் அவருடைய சகோதரர்களும் நடிகர்களாக விளங்கினர். செகன்னாத ஐயரால் தோற்றுவிக்கப்பட்ட பாலமீன ரஞ்சனி சங்கீத சபையில் சிறிது காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். பெரிய நடிகர்களிடம் கட்டுப்பாடு குலைந்து போனதைக் கண்ட சுவாமிகள், 1918இல் மதுரை தத்துவ மீனலோசனி வித்துவ பாலசபா என்ற நாடகக் குழுவை சிறுவர்களுக்காக உருவாக்கினார். இச்சபையில் டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகக் கலைஞர்களாக உருவாகினர். நடிப்புத் துறையில் அக்கால நாடகங்களில் பெரும் புரட்சிகளை ஏற்படுத்தியவர்களில் முதன்மையானவர் சுவாமிகள் என்றால் அது மிகையாகா. பம்மல் சம்பந்த முதலியார், சூரியநாராயண சாஸ்திரியார், கோவிந்தசாமி ராவ், கந்தசாமி முதலியார், தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர்,

கன்னையா, நவாப் இராஜமாணிக்கம், டி.கே.எஸ் சகோதரர்கள் ஆகியோர் அக்காலத்தில் நாடகப்பணி செய்தவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**சுவாமிகள் கூறும் நாடக வரையறை:**

நாடகம் என்பதற்குச் சங்கரதாஸ் சுவாமிகள், “ஒரு கதையின் வரலாற்றைத் திரை, உடை, நடை பாவனையாலும், இனிய கீதத்தாலும், இடத்திற்குத் தகுந்தபடி வசனத்துடன், இயற்கையாக நடத்தப்படுவதே நாடகம்” என்பார். “சில போலி மக்கள் என்னால் இயற்றப்பெற்ற பாடல்களைத் திருடித் தன்னால் வரைந்தவையென்று அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். இப்போலியர்கள் செய்த பெரும்பாதகத்திற்குத் தகுந்த தண்டனையைத் தானே அடைவார்களென்பது திண்ணம்.

**‘பாட்டைத் திருடிப் பகட்டுவதைப்பார்க்கிலும்**

**ஓட்டைத் திருடி ஊர்வழி செல்லலாம்’**

பாட்டைத் திருடும் பாதகர்கள் பெருத்துவிட்டார்கள். நாட்டிலுள்ள நாடகங்களைக் கெடுத்துவிட்டார்கள். தன் பெயருக்கே அருத்தந்தெரியாமலிருப்பவருங்கூட, நாடக ஆசிரியரென்று தெரிந்தவர் போல் தம்பட்டையைக் கட்டிக்கொண்டு முன்வந்துவிட்டார்கள்”. என மனம்வெதும்பிக் கூறுகிறார் சுவாமிகள். அவர் காலத்தில் பாடல்களைத் திருடி வாழ்க்கை நடத்தியவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பது அறியப்படுகிறது.

**சங்கரதாஸ் சுவாமி நாடகளின் இன்றைய நிலை:**

சங்கரதாஸ் சுவாமிகளின் அறுபத்தெட்டு நாடகங்களின் பட்டியலைக் காவ்யா சண்முகசுந்தரம் தம் நூலில் குறிப்பிடுகிறார். ஆனால் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களை ஆராய்ந்த செ.உலகநாதன் தம் ஆய்வில் ஐம்பது நாடகங்களின் பெயர்களைத் தருகின்றார். ஆனால் பெரும்பாலான ஆய்வாளர்கள் நாற்பதிற்கு மேற்பட்ட நாடகங்களைச் சுவாமிகள் எழுதியுள்ளதாகக் கூறுகின்றனர். அரிமளம் சு.பத்மநாபன் சங்கரதாஸ் சுவாமிகளின் நாடகங்களைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். அத்தொகுப்பில் பதினாறு நாடகங்களின் பட்டியலைத் தருகின்றார். வீ.அரசு, சங்கரதாஸ் சுவாமிகளின் பதினெட்டு நாடகங்களின் பிரதிகளைப் பதிப்பித்துள்ளார். ஆனால் இன்று தமிழ்நாடு நாடக நடிகர் சங்கக் கலைஞர்கள் சுமார் பத்து நாடகங்களுக்கும் குறைவாகவே சுவாமிகளின் நாடகங்களைக் கிராமங்களில் நடித்துவருகின்றனர் என்பது அவலத்துக்குரியது. அவற்றில் வள்ளித் திருமணம், அரிச்சந்திர மயான காண்டம், கட்டப்பொம்மன், பவளக்கொடி, கோவலன் சரித்திரம் போன்ற நாடகங்கள்தான் கிராமங்களில் இன்றைய திரைப்படப் பாடல்களுடன் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. அவற்றில் ‘வள்ளித் திருமணம்’ நாடகம் கிராமங்களில் அதிகளவில் நடத்தப்படுகிறது. அதுவும் மழைவரம் வேண்டி நடத்தப்படுவதாக நம்பப்படுகிறது. இது ஆய்வாளர் களஆய்வில் நேரில் கண்டது.

**தமிழ் நாடகத் தலைமையாசிரியர்:**

தொழில் முறையிலேயே இயங்கிவந்த நாடகக் குழுக்களை எல்லாம் ஒழுங்குபடுத்தி நடிகர்கள் தெய்வத்திடமும் தேசத்திடமும் மக்களிடமும் அன்போடும் பக்தியோடும் வாழவேண்டும் என்பதைக் கற்றுக்கொடுத்தவர் சங்கரதாஸ்சுவாமிகள், ஆகவேதான் தமிழ் நாடக உலகம் ‘தமிழ் நாடகத் தலைமையாசிரியர்’ என்று அவரை இதயத்தில் வைத்துப் போற்றி வந்தனர் என்கிறார் எஸ்.வி.சகஸ்ரநாமம்.

**சுவாமிகள் நாடகங்களின் தனித்துவம்:**

சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்களில் இசை முக்கிய இடத்தைப் பெறுவதைக் காணலாம். பாமரர்களும் புரியும் வண்ணம் செவ்வியல் இசையையும் நாட்டார் இசையையும் இணைத்து ஒருவிதமான கலப்பிசையை நாடகத்தில் புகுத்தியவர் சுவாமிகளே ஆவார். இவர் எழுதிய பெரும்பான்மையான நாடகங்கள் புராணம், அம்மானை, மாலைப் பாடல்களின் தழுவல்களாகும். வெண்பா, அகவல், கலித்துறை, எண்சீர்கழிநெடிலடியாசிரிய விருதம், கண்ணிகள், சந்தம், நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து, வண்ணம், ஓரடிக்கும்மி, கலிவெண்பா, தாழிசை, கீர்த்தனை எனப் பல வகையான இசைகளுடன் பாடல்களையும், அதிகமான வசனங்களையும், குறைந்த உரையாடல்களுடனும், சித்தர் பாடல், தர்க்கப் பாடல், நாட்டுப்புறப் பாடல், தாலாட்டுப் பாடல், கஜல், மங்களப் பாடல், இறைவணக்கப் பாடல் எனச் சுவாமிகளின் நாடகங்கள் புதுப்பொலிவுகளைப் பெற்றன. கஞ்சிரா என்ற சிறுபறையைக் கண்டறிந்து நாடகத்தில் புகுத்தியவரும் சுவாமிகளே ஆவார்.

சங்கரதாஸ் சுவாமிகள் காலங்களில் தமிழ் நாடகங்கள் தெருக்கூத்துக்களாகச் சரியான மேடை அமைப்பின்றி நடைபெற்றன. அவர் தமிழ் மேடை நாடகங்களில் காட்சிகளைக் களம் என்றும், ஸீன் என்றும் மாற்றித் திரை, ஒளி, அணிகலன்கள் எனத் திட்டமிட்டு மேடை அமைத்துப் பல கட்டுப்பாடுகளுடன் அரங்கேற்றம் செய்தார். நகைச்சுவைக்கென்று கூத்தாடி, பபூன் எனப் படைக்காமல் நாடக மாந்தரையே கதைப்போக்கில் நகைச்சுவை வழங்கச் செய்வது இவரது இயல்பாகும்.

**சங்கரதாஸ் சுவாமியும் நடிப்பும்:**

சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்களில் நடிப்பதிலும் வல்லவர். நாடகக்குழுவில் இருந்தபோது, இரணியன், இராவணன், எமதருமன், சனீசுவரன், கடோற்கஜன் முதலிய அச்சம் தரும் வேடங்கள் புனைந்து நடித்து வந்தார். நாயுடு குழுவில் நாடக ஆசிரியராகப் பணியாற்றியபோது, சனிபகவான் வேடந்தாங்கி நடித்தார். விடியற்காலையில் வேடங்களை களைய நீர் நிலைக்குச் செல்லும்போது வேடத்தைக் கண்ட, சலவைத் தொழில் புரிந்து வந்த கர்ப்பிணிப் பெண் அஞ்சி அந்த இடத்திலேயே உயிர் நீத்தார். அந்நிகழ்வுக்குப் பின் சுவாமிகள் நாடகங்களில் நடிக்காமல், நாடகங்கள் இயற்றியும் இயக்கியும் அரங்கேற்றியும் நாடகத் தொண்டாற்றினார்.

**சுவாமிகள் நாடகத்தால் இழந்த பேரிழப்பு:**

பல ஊர்களுக்குச் சென்று நாடகங்கள் நடத்திவந்த நிலையில், தம் அன்னை மறைந்த செய்தியும் அவருக்குத் தெரியாமல் போயிற்று. அந்த ஈமச்சடங்கிற்குச் செல்லாத நிலையினைக் கீழ்க்கண்டவாறு பாடுகின்றார்.

**“பெற்றவள் கைவிட்டுப் போனாள்-மற்றவள்**
**நீயே மீனாட்சி அன்னைப் பேணி**
**வளர்த்திட்டால் என்ன-சற்றும்**
**அவளுக்கு உதவாத் தறுதலைப்**
**பயலானேன் சமஸ்காரம் செய்வதற்கும்**
**கொடுத்துவைக்காது போனேன்…”.**

இதனால் சங்கரதாஸ் சுவாமிகள் நாடகத்தின்மீது எவ்வளவு ஈடுபாட்டுடன் இருந்துள்ளார் என்பது நன்கு விளங்கும்.

**சங்கரதாஸ் சுவாமிகளின் புலமையும் சாதுர்யமும்:**

சங்கரதாஸ் சுவாமிகள் தமிழ்நாட்டில் பல ஊர்களிலும், இலங்கை யாழ்ப்பாணத்திலும் சென்று நாடகப் பணியாற்றியுள்ளார். நான்கு மணிநேரம் பாடி நடிக்கக்கூடிய அபிமன்யுசுந்தரி என்ற நாடகத்தை ஆக்கித்தந்தவர் சுவாமிகள். இந்நாடகத்தில் சுந்தரிக்கும் துரியோதனன் மகன் இலக்கணனுக்கும் திருமணம் நடத்த இசைக்கருவிகள் ஒலிக்கின்றன. அருச்சுணன் மகன் அபின்மன்யுவைக் காதலித்து அவனையே மணக்க விரும்பிய சுந்தரிக்கு அவ்வொலிகள் அவளுக்குத் தன் துன்பம் காரணமாக இன்பம் தரவில்லை. அபிமன்யு ஒரு மாலை தொடுத்து அதற்குள் சுந்தரிக்காக ஓர் ஓலை எழுதி வைக்கிறான். கணையாழியையும் வைக்கிறான். கிழவி மூலம் சுந்தரிக்கு அம்மாலை கிடைக்கிறது. அபின்மன்யு தன்னை மணக்க வந்துவிட்டான் என அறிந்ததும் அடைந்த மகிழ்ச்சியை இப்படி வெளியிடுகிறாள். தரித்திரனுக்குத் தனப்புதையல் கிடைத்தது போலும், கடலிலே அமிழ்வோனுக்குக் கப்பல் உதவியது போலும், பிறவிக்குருடனுக்குக் கண்ணொளி விளங்கப் பெற்றது போலும் என் ஆவியை நிலை நிறுத்த இந்தக் கணையாழி உதவிற்று. சற்று நேரத்துக்கு முன் முட்டாள் இலக்கணனுக்கு நான் தேவி என்பதாக, முழங்கிய மேளவகைகளைக் கேட்டு நான் வருந்திக் கொண்டிருந்தேன். இப்பொழுது அவ்வகை வாத்தியங்கள் என்னைத் தைரியப்படுத்தித் தேறுதல் சொல்வதுபோல் ஒலிக்கின்றன. எப்படியென்றால், "துந்துபியெல்லாம், 'தும் தும் தும்' என்று ஒலிக்கின்றன. சங்கங்களெல்லாம் 'பம் பம் பம்' என்று முழங்குகின்றன. தாளவகைச் சல்லரிமல்லரி கரடிகைகளோ, 'தீம் தீம்' என்று சப்திக்கின்றன. முரசு, பேரிகை, மிருதங்கங்கள், 'தோம் தோம்' என்று தொனிக்கின்றன. ஆகவே, இவ்வகை வாத்திய ஒலிகள் ஒன்றுகூடி, 'தும்', 'பம்', 'தீம்', 'தோம்', 'துன்பம் தீம்தோம்', 'துன்பம் தீர்ந்தோம்' என்ற பொருளைக் கொடுக்கலாயின. இத்தகைய சிறப்பு நுட்பம் கொண்டு இந்த 'அபிமன்யு சுந்தரி' நாடகம் சுவாமிகளால் ஒரே இரவில் இயற்றப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் இயற்றியுள்ள நாடகங்களில் காணப்பெறும் சந்தப் பாடல்கள், சுவைமிக்க உரையாடல்கள் அவருடைய நாடகப் புலமைக்குத் தக்க சான்றுகளாகும்.

சங்கரதாஸ் சுவாமிகளின் தமிழ் இலக்கியப் புலமைக்குப் பல சான்றுகள் உண்டு. காட்டாக, மதுரை மாநகரில் சுவாமிகளின் 'கோவலன் சரித்திரம்' நாடகம் அரங்கேறியது. அந்நாடகத்தில்,

**"மாபாவியோர் கூடி வாழும் மதுரைக்கு**
**மன்னா போகாதீர் இன்று"**

என்று கண்ணகி, கோவலனைத் தடுத்துப் பாடும் பாடல் அமைந்துள்ளது. இவ்வரிகளைக் கேட்ட மதுரை மக்கள் கூச்சலிட்டனர். 'எங்கே சங்கரதாஸ்? கொண்டுவா மேடைக்கு' என்று ஆராவாரம் செய்தனர். சுவாமிகள் அச்சம் ஏதுமின்றி மேடையில் தோன்றி, 'மா' என்னும் சொல் திருமகளாகிய இலக்குமியையும், 'பா' என்னும் சொல் கலைமகளாகிய பாரதியையும், 'வி' என்னும் சொல் மலைமகளாகிய பார்வதியையும் குறிக்கும் என்று விளக்கம் சொல்லித் திருவிளையாடற்புராணத்திலிருந்து மேற்கோள் காட்டினார். 'மாபாவியோர் கூடி வாழும் மதுரை' என்றால் திருமகளும், கலைமகளும், மலைமகளும் சேர்ந்து வாழும் மதுரை என்று பொருள்படுகிறது

என்றார். மக்கள் அமைதியடைந்து பாராட்டினர்.

**இறுதி வாழ்க்கை:**

தமிழ் மேடை நாடகங்களில் தனக்கெனத் தனி முத்திரைப் பதித்தத் தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் 1922 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் திங்கள் கிழமை பூதவுடல் எய்தினார். அவருடைய நினைவிடம் கடைசியாக வாழ்ந்தப் புதுச்சேரியில் உள்ளது. இன்றும் பல நாடகக் கலைஞர்களின் வாழ்வாதாரச் சுருதியாகச் சங்கரதாஸ் சுவாமிகள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

**ஆய்வு முடிவுரை:**

சங்கரதாஸ் சுவாமிகள் தம் இருபத்திரண்டாம் வயதிலேயே நாடகப் பணிக்கு வந்துவிட்டதாக அறியப்படுகிறது. புலவலேறு தண்டபாணி சுவாமிகளிடம் இலக்கண இலக்கியப் புலமையினைப் பெற்றுள்ளார். சங்கரதாஸ் சுவாமிகள் நாடகம் சார்ந்த பல்துறை வித்தகராகவும் நாடகத்திற்கு வரலாறுடன் திரை, உடை, பாவனை, இசை முக்கியம் எனவும் வலிறுத்தியவர் ஆவார். அவர் பாடல்களைத் திருடிப் பிழைத்தவர்கள் உண்டு என்பதை அவர் கூற்று வாயிலாகவே அறியமுடிகிறது. அவர் எழுதிய ஐம்பது நாடகங்களின் பட்டியல்கள் கிடைகின்றன. இன்றளவும் அவர் நாடகங்கள் மேடைகளில் நடித்து வருவது அவரைத் தமிழ் மக்கள் மறக்கவில்லை என்பதும் அவர் படைப்பிற்கு இறப்பு இல்லை என்பதும் உணரமுடிகிறது. தேசப் பக்தி, தெய்வப் பக்தி, இசையறிவு, நடிப்புத்திறன், இலக்கிய அறிவு, அறிவு நுட்பம், கட்டுப்பாடு என நிரம்பப் பெற்ற பெருமையர் என்பது இவ்வாய்வால் நன்கு விளங்கலாகிறது.

**பயன்பட்ட நூற்கள்:**

1. செ.உலகநாதன், சங்கரதாஸ் சுவாமிகள் ஆய்வு, செழியன் பதிப்பகம், திருத்தணி, 1993.
2. சக்திப்பெருமாள், தமிழ் நாடக வரலாறு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை-18, 1979.
3. ஏ.என்.பெருமாள், தமிழ் நாடகம் – ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20, 1979.
4. சு.சண்முகசுந்தரம், தமிழ் நாடகச் சரித்திரம் மரபிலிருந்து நவீனத்துக்கு, காவ்யா, சென்னை, 2008.

**சான்றெண் விளக்கம்**

1 . அரந்தை நாராயணன், தமிழ்ச் சினிமாவின் கதை, 1981, ப.3.

2 . கே.ஏ.குணசேகரன், தமிழ் நாடகமும் சங்கரதாஸ் சுவாமிகளும், 1987, ப.43

3 . சங்கரதாஸ் சுவாமிகள்,“முன்னுரை”, வள்ளித் திருமணம், 1937, பக்க எண் இல்லை.

4 . சங்கரதாஸ் சுவாமிகள்,“முன்னுரை”, கோவலன் சரித்திரம், 1939, பக்க எண் இல்லை.

5 .எஸ்.வி.சகஸ்ரநாமம், நாடகக் கலையின் வரலாறு, 1975, ப.77.

6 . செ. உலகநாதன், சங்கரதாஸ் சுவாமிகள் ஆய்வு, 1993, ப.22.